இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 74 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 08 – சனிக்கிழமை 25 அக்டோபர் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 74 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 08 - Saturday 25 October 2025 - Dak 12 Pages ₹ 5.00

## கடலில் கலக்கும் பகுதியான

# அடையாறு ஆறு முகத்துவாரத்தில் தூர்வாரும் பணி: முதல்வர் நேரில் ஆய்வு!

## முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2025) சென்னை, சீனிவாசபுரம் அருகில் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்து முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணியினை விரைந்து முடித்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன், மரு.நா.எழிலன் எம்.எல்.ஏ. மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, அக்.25-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.**

**முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணிகளை விரைந்து முடித்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.**

கடந்த 19.10.2025 அன்று சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து திருவாரூர், தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்தும், 21.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன்காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, மாவட்ட விவசாய பெருங்குடி மக்கள் பாதிக்கப்படாத வகையில் நெல் கொள்முதல் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், மழையால் நெல் மூட்டைகள் சேதம் அடையாமல் பாதுகாத்திடவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை விரைந்து கிடங்குகளுக்கு கொண்டு செல்லவும் உத்தரவிட்டார்.

### முதலமைச்சர் நேரில் சென்று ஆய்வு!

அதன்தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2025) சென்னை, சீனிவாசபுரம் அருகில் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்து முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணிகளை விரைந்து முடித்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

சென்னை நகரின் மூன்று முக்கிய ஆற்றுப்படுகைகளில் ஒன்றான அடையாறு ஆறு ஆதனூர் ஏரியில் இருந்து உருவாகி மொத்தம் 42.38 கி.மீ நீளத்திற்கு பயணித்து பட்டினபாக்கம், சீனிவாசபுரம் அருகில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தற்போது, பெய்துவரும் கனமழை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரி வேகமாக நிரம்பி வருவதன் காரணமாக நேற்று (24.10.2025) 945 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

### ஆற்றின் முகத்துவாரத்தில் தூர்வாரும் பணி விரைவு!

முதலமைச்சர் அவர்கள், அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தை சுமார் 150 மீட்டர் அகலப்படுத்த ஏற்கனவே உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து, ஆய்வு மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முகத்துவாரப் பகுதியில், பொக்லைன் இயந்திரங்கள் மற்றும் ஜேசிபி இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரி அகலப்படுத்தும் பணிகளை பார்வையிட்டு, கரைப்பகுதியில் தூர்வாரி அள்ளப்பட்ட மணல் குவியலை உடனடியாக அகற்றிடவும், இப்பகுதியில் கூடுதலாக இரண்டு பொக்லைன் இயந்திரங்களைப் பயன்படுத்தி, முகத்துவாரப் பகுதியினை அகலப்படுத்தி தூர் வாரும் பணிகளை விரைந்து முடிக்கவும் அறிவுறுத்தினார்.

### குழுவினை அமைத்து கண்காணிக்க உத்தரவு!

மேலும், அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரப் பகுதியினை மாநகராட்சி வட்டார துணை ஆணையர் தலைமையில் நீர்வளத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கொண்ட குழுவினை அமைத்து வடகிழக்கு பருவமழை காலம் முழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருண்மொழி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## “A Sun from the south”

# ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ ஆங்கில நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, அக்.25-**

**“A Sun from the south” (தெற்கிலிருந்து ஒரு சூரியன்) நூலினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் “A Sun from the south” என்னும் நூலினை வெளியிட்டார். இந்நூலினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தனது ‘திசை தோறும் திராவிடம்’ திட்டத்தின்கீழ், கே.எஸ்.எல். மீடியாவுடன் இணைந்து கூட்டு வெளியீடாக வெளியிடுகிறது.

“A Sun from the South” என்னும் இந்நூல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆளுமையை திராவிட இயக்கத்தோடு இணைத்துக் காணும் அதே வேளையில் இந்தியாவின் சமகால வரலாற்றை, அரசியலை தெற்கிலிருந்து ஆராய ஊக்கமும் உற்சாகமும் தரும் விதமாக தொகுக்கப்பட்டுள்ளது. “தெற்கிலிருந்து ஒரு சூரியன்” என்னும் பெயரில் முன்னர் வெளிவந்த தமிழ் நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பான இது, மூலநூலைப் படிக்கும் அதே விறுவிறுப்போடு வாசகர்களைக் கவரும் விதமாகக் கூடுதல் கவனம் செலுத்தி எழுதப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு.மா. ஆர்த்தி, மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உதவி இயக்குநர் முனைவர் ப. சரவணன் மற்றும் இந்து தமிழ்த்திசை துணை ஆசிரியர் எ.வள்ளியப்பன், புத்தக மொழிபெயர்ப்பாளர் விஜயசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## முன்னேற்பாடு பணிகளில் அரசு தீவிரம்:

# எவ்வளவு பெரிய மழை பெய்தாலும் அதனை எதிர்கொள்ளத் தயார்!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

*சென்னை, அக்.25-*

*வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வது குறித்து ஆலோசனைக் கூட்டம் எம்.ஆர்.சி. நகரில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது.*

*பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தயாராக உள்ளன எனவும் மிகப் பெரிய மழையையும் சமாளிக்க, உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது என்றும்,*

*வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து*



*முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அரசு சார்பில் எடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.*

*சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள நகராட்சி நிர்வாக இயக்கு நரகத்தில், வடகிழக்கு பருவமழையின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது.*

*இந்தக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கே.என். நேரு, தமிழ்நாட்டில் மிகப்பெரிய மழையையும் சமாளிக்கும் வகையில், உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சென்னையில் மழை நீரை வெளியேற்றுவதற்காக ஆயிரத்து 436 மோட்டார் பம்புகளும், 100Hp திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகளும் தயார் நிலையில் உள்ளதாக கூறினார்.*

*சென்னையில் மழைநீரை வெளியேற்றுவதற்காக டிராக்டர் மேல் பொருத்தப்பட்டுள்ள 500 மோட்டார் பம்புகளும் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.*

*பருவமழையை எதிர்கொள்ள அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அரசு சார்பில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டார்.*

## வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி:

# வரும் 27ஆம் தேதி ‘மோன்தா’ புயல் எச்சரிக்கை!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, அக். 25-*

*வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, வரும் 27ம் தேதி புயலாக மாற வாய்ப்புள்ளதாகவும், இந்த புயலுக்கு “மோன்தா” என பெயரிடப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ள நிலையில், மேற்குவடமேற்கு நோக்கி நகர்ந்து, அதே பகுதியில் நிலைகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது மேற்குவடமேற்கு நோக்கி நகர்ந்து இன்று தென்கிழக்கு மற்றும் அருகிலுள்ள மத்திய வங்கக்கடலில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தீவிரமடைந்து, 26ம் தேதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 27ம் தேதி காலை தென்மேற்கு மற்றும் அருகிலுள்ள மத்திய மேற்கு வங்கக்கடலில் புயல் சின்னமாக உருவாகும் என்றும், அன்றைய தினம் சென்னையில் மிகக் கனமழை பெய்யும் என்று ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும், நாளையதினம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*